திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே பாம்புகள் அதிகமாக நடமாடுகின்றன. அது மட்டுமல்ல. முகமூடி கொள்ளையர்கள் அட்டகாசமும், திருடர்கள் அட்டூழியமும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே மின்சார வாரியம் இதில் எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுத்தால் நல்லது. அப்படி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாம்புகள் நடமாடுவதில்லை. ஊர்ந்து செல்வதாகத்தான் எனக்கு தெரிகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : படம் எடுத்து வேண்டுமானால் ஆடும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வேண்டுமானால், பாம்பு படம் எடுத்துத்தான் ஆடும், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் சொல்வது போல. இதிலே நகரிய ஊராட்சி, செயல் அலுவலரிடமிருந்து தீர்மானம் போடப்பட்டு வரவேண்டியுள்ளது. அது சம்பந்தமாக உதவிப் பொறியாளர் அந்த அலுவலகத்திடத்திலே கேட்டுக் கொண்டுள்ளார். அவர்கள் தீர்மானம் போட்டு அனுப்பாததனால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : முகமூடிக் கொள்ளையர்கள் விளக்குகளை உடைத்து விடுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். தெரு விளக்குகள் ஆங்காங்கு அணைக்கிறபோது, தனிப் பிரிவினர் மூலம் உடனுக்குடன் பழுது பார்த்து எரிய வைக்கின்ற அளவுக்கு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்கான வாய்ப்புகள் ஏற்கெனவே இருக்கின்றன. இதற்காக என்று தனிப் பிரிவு அவசியமில்லை. ஏற்கெனவே இருக்கின்ற பணியாளர்களே போதும்.

மின் விளக்குகள், குழல் விளக்குகள் தயாரித்தல்.

*** 12. வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் —

(அ) தமிழ் நாடு மின்சார வாரியம் தனது பொறுப்பிலேயே மின் விளக்குகள் குழல் விளக்குகள், தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

REPORTING SECTION
(Council)

1984 பிப்ரவரி 15]

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இப்படி வாங்குவதாலே அரசுக்குப் பெரும் இழப்பு ஏற்படும் என்று நான் கருதுகிறேன். அதை அரசே, மின்வாரியமே தயாரிக்குமானால், ஓரளவுக்கு லாபகரமாக இருக்கும். அந்த முயற்சியை மேற்கொள்ளுகின்ற எண்ணம் அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குழல் விளக்குகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் ஏற்கனவே நிரம்ப இருக்கின்றன. ஆகையால் மின்சார வாரியம் இதற்காக மேற்கொண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. வாரியம் நிர்வகித்தால் அது லாபகரமாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வாரியத்தின் மீது அவர்களுக்கு இருக்கின்ற அளவு கடந்த நம்பிக்கைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே வாரியம் லாபத்தில் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : குழல் விளக்கு தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் நிரம்ப இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குழல் விளக்குகளை, அரசாங்கம் தமிழ் நாட்டிலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, நேரில் அவர்களிடமிருந்து வாங்குகின்ற எண்ணம் அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டுத்தான் விளக்குகள் வாங்கப்படுகின்றன. யார் குறைவான விலையில் தருகின்றார்கள் என்று பார்த்து, அவர்களுக்குத்தான் உரிமை தரவேண்டும் என்பதுதான் அரசின் நியதியாகும். தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலே மட்டும்தான் வாங்க வேண்டுமென்பதை அரசு விதிகள் ஏற்றுக்கொள்வதில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : இந்த மின்சாரத் துறைக்கு ஒரு ஆண்டுக்கு பல்புகள், குழல் விளக்குகள் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்படுகின்றன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.